**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 333 நாள்: 27.07.2026

## பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று (27.07.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், அடையாறு மண்டலம், வார்டு-168க்குட்பட்ட ஈக்காட்டுத்தாங்கல், ஜெ.என். சாலையில் நடைபாதை, வண்டல் வடிகட்டித் தொட்டி, சேதமடைந்த சாலை உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், வார்டு-174க்குட்பட்ட சாஸ்திரி நகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-138க்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் மயானபூமி, வார்டு-128க்குட்பட்ட விருகம்பாக்கம் மயானபூமியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மயானபூமியினைப் தூய்மையாகப் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-48க்குட்பட்ட வெங்கடேசா கிருஷ்ணா தெருவில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகம், வண்ணாரப்பேட்டை மார்க்கெட் பகுதியில் உள்ள அம்மா உணவகம், வார்டு-43க்குட்பட்ட தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனை (காலரா மருத்துவமனை), மருத்துவமனை வளாகத்தில் உள்ள பூங்கா மற்றும் வீடற்றோர் மற்றும் பெண் குழந்தைகள் காப்பகம், வார்டு-42க்குட்பட்ட பகுதியில் கட்டப்பட்டு வரும் படைப்பகம், கண்ணன் தெருவில் கட்டப்பட்டு வரும் சென்னை பள்ளிக் கட்டடம், வார்டு-40க்குட்பட்ட வி.எம்.ஆர் அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணி மற்றும் பெருமளவு திடக்கழிவு உற்பத்தி குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், கட்டப்பட்டு வரும் வணிக வளாகம், சென்னை பள்ளி, படைப்பகம் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும், அம்மா உணவகத்தில் வழங்கப்படும் உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் சமையலறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், மருத்துவமனையில் பொது மக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்தும், அப்பகுதியில் உள்ள பூங்காவினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியில் தூய்மைப் பணி மற்றும் பெருமளவு கழிவு உற்பத்திகளை அன்றாடம் அகற்றிடுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**